# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.13

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மரு. பிரித்தா | Caste: | |
| Father's Name: | செந்தமிழ்செல்வன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 26.10.2023.

(A1, A2, A8 absent . Petition u/s. 317 Crpc filed and allowed. A3 to A7 present.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை உள்ளிருப்பு மருத்துவராக பணிபுரிகிறேன். இதற்கு முன் 2020ல் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 22.03.2020ம் தேதி மாலை சுமார் 4.35 மணிக்கு பணியில் இருந்தபோது இராமநாதபுரம் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளரிடமிருந்து வந்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று கொண்டேன். அதில் தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 67/2020 u/s. 302 IPC என்ற வழக்கில் இறந்துபோன அரவிந்தன் என்பவரின் மீது பிரேத பரிசோதனை செய்யுமாறு கேட்டிருந்தார். சவக்கிடங்கில் அவரது பிரேதத்தை த.கா. 1553 ஜெயசேகரன் என்பவர் அடையாளம் காண்பித்தார். 22.03.2020ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு பி.எம்.எண். 91/2020 பிரகாரம் பார்வையிட்டு

பிரேத பரிசோதனை துவங்கினேன். இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் மரண விரைப்பு காணப்பட்டது. இரண்டு கண்களும் மூடி இருந்தது. வாய் மூடி இருந்தது. மூக்கின் துவாரங்களில் நுரை காணப்பட்டது. வெளிப்படையான காயம் எதுவும் காணப்படவில்லை. மார்புக்கூடு திறந்து பார்த்தபோது எந்தவிதமான எலும்பு முறிவும் காணப்படவில்லை. ரத்தக்கசிவும் காற்று கசிவும் காணப்படவில்லை. நுரையீரல் மற்றும் இதயம் வெளிப்புறமும், உட்புறமும் கன்றி போயிருந்தது. வயிற்று பகுதி திறந்து பார்த்தபோது இரைப்பை காலியாக காணப்பட்டது. கல்லீரல், சிறுநீரகம், குடல் கன்றி போயிருந்தது. கழுத்துப்பகுதியின் தொண்டை எலும்பு முறியாமல் இருந்தது. தலைப்பகுதி ஆராய்ந்து பார்த்ததில் மேல் தோலில் வெளிப்படையான காயம் எதுவும் காணப்படவில்லை. மண்டை ஓட்டு எலும்பு முறியாமல் காணப்பட்டது. மூளையின் சவ்வுகள் கிழியாமல் காணப்பட்டது. டியூரா எனும் மூளைச்சவ்வை திறந்து பார்த்தபோது அந்த சவ்வுக்கு கீழ் அதிகப்படியான இரத்தக்கசிவு வலது tempero–parietal பகுதியில் காணப்பட்டது. அது சப்டியூரல் ஹெமரேஜ் என்று அழைக்கப்படும். அதற்கு கீழ் உள்ள மூளைப்பகுதி சாதாரணமாக காணப்பட்டது. பிரேத பரிசோதனை மாலை சுமார் 5.45 மணிக்கு முடிவடைந்தது. உடலுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. அதன் அறிக்கை பெறும்வரை இறப்பின் கருத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.சா.ஆ.18**. அதன் பகுப்பாய்வு அறிக்கையில் எந்தவிதமான நச்சு பொருளும் காணவில்லை என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த டாக்சிகாலஜி அறிக்கை **அ.சா.ஆ.19**. 31.08.2020 அன்று நான் இறுதி அறிக்கை வழங்கினேன். அதில் மேற்படி

நபர் வலது tempero–parietal பகுதியில் டியூரா எனும் மூளைச்சவ்வுக்கு கீழ் ஏற்பட்ட அதிகப்படியான இரத்தக்கசிவின் விளைவாக இறப்பு நேர்ந்துள்ளது என்று கருத்து தெரிவித்து இறுதி அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய இறுதி அறிக்கை **அ.சா.ஆ.20**. ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது அவருக்கு பின்னால் ஒரு வாகனம் வந்து மோதி அவர் தூக்கி வீசப்பட்டு கீழே விழும்போது வலது தலைப்பகுதியில் அத்தகைய காயம் ஏற்பட்டு அதனால் உட்பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதுசம்பந்தமாக காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் A1 முதல் A7 தரப்பில் குறுக்கு விசாரணை :–**

04.10.2020 அன்று டிஎஸ்பி என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல்தான் டிஎஸ்பியிடமும் சொன்னேன். பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொடுக்கும்போது வழக்கின் சரித்திரம் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வெளிக்காயங்கள் இல்லை என்றால் உடலிலிருந்து இரத்தம் வெளியேற வாய்ப்பில்லை என்றால் வெளிக்காயங்கள் இல்லாமலும் காது, மூக்கு துவாரங்களிலும் வெளியேற வாய்ப்புண்டு. காதிலும், மூக்கிலும் இரத்தக்கசிவு இருந்தால் அதை பிரேத பரிசோதனையின்போது கவனித்து பிரேத பரிசோதனை சான்றிதழில் எழுதியிருப்பேன் என்றால் சரிதான். அத்தகைய குறிப்புகள் நான் தயார் செய்த பிரேத பரிசோதனை சான்றிதழில் இல்லை என்றால் சரிதான். வட்டார தடய ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையில் இறந்த நபரின் இரத்தம் எந்த வகையை சார்ந்து என்று சொல்லப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஒருவர் இறந்துவிட்டால் எப்பொழுது இறந்தார் என்பதை

நிர்ணயிக்க சில வழிகள் உள்ளது என்றால் சரிதான். ஒருவர் இறந்துவிட்டால் முதல் 3 மணி நேரங்களில் ஆரம்ப தளர்வு என்ற நிலை உடலில் ஏற்படும் என்றால் சரிதான். மரண விரைப்பு தன்மை நெற்றிபொட்டில் 3 மணி நேரத்திற்கு பிறகு ஆரம்பித்து உடல் முழுதும் பரவ 12 மணி நேரங்கள் ஆகும் என்று சொன்னால் 3 மணி நேரத்திற்கு பிறகு ஆரம்பிக்கும் என்பது சரிதான் ஆனால் அது உடல் முழுதும் பரவுவதற்கு அந்த உடல் இருக்கும் சூழல், தட்ப வெப்பநிலைகளைச் சார்ந்திருக்கும். மரண விரைப்பு தன்மை உடல் முழுதும் ஏற்பட்ட பின்பு 12 மணி நேரங்கள் உடலில் தங்கியிருக்கும் என்று சொன்னால் இருக்க வாய்ப்புண்டு. மரண விரைப்பு தன்மை மறுபடியும் மறைவதற்கு மேலும் 12 மணி நேரங்கள் ஆகும் என்றால் சூழ்நிலைகளைப் பொறுத்து அது மாறுபடும். மரண விரைப்பு தன்மை குறித்து கூறப்படுவது Rule of 12 என்று அழைக்கப்படும் என்றால் எனக்கு அதைப்பற்றி ஞாபகமில்லை. மரண விரைப்பு தன்மை எந்த நிலையில் இருந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்று கேட்டால் நான்கு லிம்ப் பில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் பிரேத பரிசோதனை செய்தபோது உடல் முழுவதும் பரவி காணப்படவில்லை என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் மரண விரைப்பு தன்மையைப் பற்றி முடிவுக்கு வர முடியாததால் தான் மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரத்திற்கு முன் இறந்திருக்க வாய்ப்புண்டு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் மற்றும் வெளிநபர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அவசர நிலையில் ஆவணங்களை தயார் செய்து வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தலைக்கவசம் இன்றி ஒரு நபர்

பைக்கில் சென்று தானாக வழுக்கி விழுந்தாலும் இந்த காயங்கள் ஏற்பட்டு இறப்பு நேரிட வாய்ப்புண்டு.

**எதிரி A8 தரப்பில் குறுக்கு விசாரணை :–**

ஹெமரேஜ் என்பது நான்கு வகைப்படும் என்றால் சரிதான். Subdural Haemorrhage என்பது மூன்று வகைப்படும் என்றால் சரிதான். அதில் இறந்துபோன நபருக்கு எந்த வகையான இரத்தக்கசிவு என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். Subdural Haemorrhage என்பது ஒருவர் தாக்கப்பட்டாலோ, விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் சென்று தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு. இறந்துபோனவரின் உடலில் சிராய்ப்பு காயங்கள் எதுவும் இல்லை.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.14

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | எஸ். ஜெயசேகர் | Caste: | |
| Father's Name: | சத்யநேசன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 26.10.2023.

(A1, A2, A8 absent . Petition u/s. 317 Crpc filed and allowed. A3 to A7 present.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கீழக்கரை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். 2020ல் நான் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 22.03.2020ம் தேதி உத்தரவுப்படி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண் . 67/2020 வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்துபோன அரவிந்தன், வயது 22/20 என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது அவருடன் இருந்தேன். பின்னர் சுமார் 4.30 மணிக்கு காவல்துணைக்கண்காணிப்பாளரின் பிரேத பரிசோதனை வேண்டு கோள் கடிதம் பெற்று இராமநாதபுரம் தலைமை மருத்துவமனை சென்று மருத்துவ அலுவலரிடம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பிரேத விசாரணை முடிந்தபிறகு அரவிந்தனின் உடலைப் பெற்று

உறவினர்களிடம் ஒப்படைத்தேன். மேற்படி நபர் அணிந்திருந்த உடைகளான இரத்தம் படிந்த கருப்பு சிவப்பு கலந்த கட்டம் போட்ட டிரவுசர் ஒன்று, இரத்தம்படிந்த கட்பனியன் ஒன்று, இரத்தம் படிந்த Bigs and Rogs என்று கலரில் எழுதப்பட்ட சிவப்பு கலர் முழுக்கை சட்டை ஆகியவற்றை பெற்று நிலையம் வந்து ஒப்படைத்து அறிக்கை செய்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் A1 to A7 தரப்பில் குறுக்கு விசாரணை**

22.03.2020 மற்றும் 04.10.2020 ஆகிய இருதேதிகளில் டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் A8 தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக காவல்நிலையத்தில் இருந்து வெளியில் சென்றால் கடவுச்சீட்டு கொடுப்பார்கள் என்றால் சரிதான். அந்த கடவுச்சீட்டில் எந்த பணிக்கு எந்த தேதியில், எந்த இடத்திற்கு பணியில் சென்றேன் என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கடவுச்சீட்டு பெற்றுகொண்டுதான் சென்றேன். அதை டிஎஸ்பியிடம் கொடுத்தேன். அந்த பொருட்களை கைப்பற்றி அத்தாட்சி எதுவும் தயாரிக்கவில்லை. இந்த வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை பின்னால் சேர்த்துகொண்டார்கள் என்றால் சரியல்ல.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.15

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சிவாஜி | Caste: | |
| Father's Name: | சரவணமுத்து | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 26.10.2023.

(A1, A2, A8 absent . Petition u/s. 317 Crpc filed and allowed. A3 to A7 present.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மண்டபம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன் 2020ல் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 22.03.2020ம் தேதி இரவு சுமார் 19.00 மணிக்கு தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் தபால் அலுவலாக கடவுச்சீட்டு பெற்று தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 67/2020 u/s. 147, 307, 302 IPC and sec 3(1)(r) SC/ST (POA) Act வழக்கின் முதல் தகவல் அறிக்கை அடங்கிய தபால்களைப் பெற்று அன்று இரவு 20.30 மணிக்கு இராமநாதபுரம் அமர்வு நீதிமன்றம், பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு நீதிமன்றத்தில் மேற்படி தபால்களை ஒப்படைத்தேன். பின்னர் உயர் அதிகாரிகளுக்கு தபாலை

ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை சமர்ப்பித்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் A1 to A7 தரப்பில் குறுக்கு விசாரணை:-**

டிஎஸ்பி என்னை 04.10.2020ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். 22.03.2020 மதியம் நான் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் இருந்தேன். அன்று மதியம் 1.00 மணிக்குமேல் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தேவிப்பட்டிணம் காவல்நிலையத்திற்கும் இராமநாதபுரம் நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 18 கி.மீ இருக்கும். அன்று தேவிப்பட்டிணத்தில் இருந்து இராமநாதபுரத்திற்கு பஸ்ஸில்தான் வந்தேன். டிக்கெட் எடுத்தேனா என்றால் நான் வாரண்டில் வந்தேன். இரவு 8.00 மணிக்கு இராமநாதபுரம் பேருந்துநிலையத்திற்கு வந்துசேர்ந்தேன். இராமநாதபுரம் பேருந்து நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 7 கி.மீ இருக்கும். இராமநாதபுரம் பேருந்து நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே 3 கி.மீ இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நீதிபதியின் வீட்டிற்கு சென்று முதல் தகவல் அறிக்கையை கொடுத்தேன். 22.03.2020 அன்று கொரானோ காலம் என்பதால் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் சொல்வதுபோல் பஸ்ஸில் தேவிப்பட்டிணத்தில் இருந்து இராமநாதபுரத்திற்கும், இராமநாதபுரத்திலிருந்து நீதிமன்றத்திற்கு பேருந்தில் வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 23.03.2020ம் தேதி பெறப்பட்டதாக சீலிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கை பெறவும் இல்லை, அதை நீதிமன்றத்தில் கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரி A8 தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்பட்டது. அந்த கடவுச்சீட்டை டிஎஸ்பி விசாரிக்கும்போது ஒப்படைத்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் அதை நீதிமன்றத்திற்கு அனுப்புவதில் ஏற்பட்ட காலதாமதத்தை சரிகட்டுவதற்காக பின்னிட்டு இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)